**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

**OS.No**. 583/2020 பெயர்- துளசியம்மாள் நாள்.22.01.2024

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

எனது மகன் இறப்பதற்கு 1 வருடத்திற்கு முன்பிருந்தே உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அவருக்கு ஈரோடு மற்றும் கோவையில் உள்ள பெரிய பெரிய மருத்துவமனைகளில் சிகிச்சை அளித்தோம் என்றால் சரிதான். அதற்கு பல லட்ச ரூபாய்கள் செலவானது என்றால் சரிதான், எங்களிடம் பணம் இருந்தது அதை வைத்து செலவு செய்தேன். என்னிடம் பணம் இருந்ததை என்பதை காட்டுவதற்கு ஆதாரங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மகன் உயிரோடு இருக்கும் காலத்திலேயே வெளி நபர்களிடம் பணத்தை கடனாக வாங்கிவிட்டு, திரும்பி கொடுக்கும் பழக்கம் வைத்திருந்தார் என்றால் என் மகன் யாரிடமும் கடன் வாங்கமாட்டார், என் மகன் யாரிடமும் கடன் வாங்கியதே கிடையாது. 2014 ல் என் மகன் பழனிச்சாமி என்பவரிடம் ரூ.1,00,000/- கடன் வாங்கி, அதை திரும்பி கொடுத்துவிட்டதாக என்னுடைய எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், கைமாத்தாக வாங்கியதுதான். பழனிச்சாமியிடம் என் மகன் ரூ.1,00,000/- கடன் வாங்கவில்லை என்று சொன்னால் நான்தான் வாங்கிவர சொன்னேன், புரோநோட்டில் ஸ்டாம்பு ஒட்டி கையெழுத்து போட்டு என் மகன் ரூ.1,00,000/- கடன் வாங்கி வந்தான். பழனிச்சாமியிடம் என் மகன் வாங்கிய கடன் தொகைக்காக ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் வேறொரு வழக்கை என் மீது தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். மேற்படி வழக்கில் தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனுவில் எங்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மனு நிலுவையில் உள்ளபோது என் சொத்தை எனக்கு தெரிந்த நபரின் பெயரில் கிரயம் எழுதி வைத்துவிட்டேனா என்றால் அந்த சொத்தின் மீது வழக்கு போடவில்லை. என் மகன் மோகன்ராஜின் மருத்துவ செலவிற்கு அவர் எவ்வாறு செலவு செய்தார் என்றால் நான்தான் செலவு முழுவதும் செய்தேன். என் மகன் வைத்திய செலவிற்காகவும், இதர செலவிற்காகவும் கடன் வாங்கினார் என்றாலும், அதை மறைத்து இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் மகன் பழனிச்சாமியிடம் புரோநோட்டு எழுதிக்கொடுத்து வாங்கிய ரூ.1,00,000/- கடனை திரும்பி

கொடுத்துவிட்டதாகவும், இருந்தும் அவர் மேற்படி புரோநோட்டை திருப்பி கொடுக்கவில்லை என்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். எந்த தேதியில் என் மகன் பழனிச்சாமியிடம் வாங்கிய மேற்படி ரூ.1,00,000/-ஐ திருப்பி கொடுத்தார் என்று என்னால் சொல்ல இயலுமா என்றால் 6 வருடத்திற்கு மேலாகிவிட்டது, அதனால் என்னால் சொல்ல இயலாது. பணத்தை திரும்ப பெற்றுக்கொண்டும், புரோநோட்டை திருப்பி தரவில்லை என்று குறிப்பிட்டு, பழனிச்சாமியின் மீது புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. பழனிச்சாமியிடம் வாங்கிய கடனுக்காக பழனிச்சாமி இன்னொரு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், சம்பத்திடம் வாங்கிய கடனுக்காகதான் சம்பத் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல, சம்பத்திடம் கடன் எதுவும் வாங்கவே இல்லை. என் மகன் திருமணம் ஆகாமலே இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னுடைய மகன் மோகன்ராஜுக்கு அவருடைய தாயாரான நான் மட்டும்தான் வாரிசு என்றால் சரிதான். 09.12.2010 ம் தேதியில் எனது மகன் அனுமன்பள்ளி கிராமத்தில் 32 செண்ட் இடம் வாங்கினாரா என்றால் வாங்கினார். மேற்படி சொத்தைதான் பழனிச்சாமி என் மீது தாக்கல் செய்துள்ள வழக்கு நிலுவையின்போது நான் விற்றுவிட்டேன் என்றால் சரிதான். காசு எதுவும் வாங்காமல் மேற்படி சொத்தை எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை. என் மகன் விட்டுசென்ற அனைத்து சொத்துக்களுக்கும் நான்தான் வாரிசு என்றால் சரிதான். அதேபோல் என் மகன் வாங்கிய கடனுக்கு நான்தான் பொறுப்பு என்றால் என் மகன் அவ்வாறு கடன் எதுவும் வாங்கவே இல்லை. என் மகன் வாங்கிய தாவா கடனை நான்தான் திரும்பி செலுத்த கடமைபட்டுள்ளேன் என்றால் என் மகன் கடன் வாங்கவே இல்லை, என்னிடமே காசு உள்ளது, கடன் வாங்கவேண்டிய அவசியமே இல்லை. என் மகன் வாங்கிய கடனை திரும்ப செலுத்தாமல் ஏமாற்றும் நோக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.